# தமிழ் கல்விநிலையம் – மவுண்ட்றூயிட்


**Tamil Study Centre - Mount Druitt**

*Mobile: 0449 892 066*

*Email :mtdruittttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*


# ஆண்டு 10 – பேச்சுப் போட்டி 2019

பேச்சுப் போட்டி எதிர்வரும் **01.06.2019** அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

அனைவருக்கும் அன்பான வணக்கம் !




## மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்சகத்துளோரெலாம் எதிர்த்துநின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

என்று கவிதை மூலம் மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டிய ஒரு புரட்சிக் கவிதான் பாரதியார்.

"பட்டங்கள் ஆழ்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்று பெண்ணுரிமைக்காக குரல் கொடுத்தார்.

"வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர்கள் தலை கவிழ்ந்தார்" என்ற பாரதியின் கனவு இன்று உண்மையானது.

இன்று பெண்கள் பல்கலைக் கழகம் சென்று பட்டம் பெறுவதுடன், பாடசாலை ஆசிரியர், பாராளுமன்ற உறுப்பினர், பட்டத்துராணி, பெண்மருத்துவர், விஞ்ஞானிகள், விண்வெளி ஆராட்சியாளர்கள், என சமூகத்தின் எல்லாத்துறைகளிலும் முக்கிய பங்காற்றுகின்றனர்.

அதுமட்டுமன்றி "சாதிகள் இல்லையடி பாப்பா குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்று தீண்டாமை ஒழிப்பு குறித்தும் பாடியுள்ளார்.

ஐந்து வயதில் தாயையும், பதினாறு வயதில் தந்தையையும் இழந்த பாரதியார் ஒரு கவிஞர் மட்டுமன்றி எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், விடுதலை வீரர் என பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவர்.

இவர் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, சமஸ்கிருதம், வங்காளம் என பல மொழிகளைக் கற்றவர். எனினும் “ யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று தெளிவாகக் கூறியுள்ளார். 11 வயதிலேயே சுப்பிரமணியபாரதியார் என்ற பட்டத்தைப் பெற்ற இவர் 39 வயதுவரை மட்டுமே வாழ்ந்தார் என்பது கவலைக்குரிய விடயமாகும். எனினும் இவர் பாடிய “வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே!” என்ற தமிழ்த் தாய் வாழ்த்து, இன்றும் தமிழ் உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

நன்றி,

வணக்கம்

ஆக்கம்: ஆசிரியர் திருமதி.விஜயசுதா குகனேஸ்வரன்.